தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2039, ஐப்பசி 27

2008 நவம்பர் 12, புதன்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. ஆவுடையப்பன் அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"ஆற்றின் அளவறிந் தீக அதுபொருள்
போற்றி வழங்கு நெறி."

வருவாய் அளவை அறிந்து, அதனை வகுத்து வழங்குவதே பொருளைச் சீராகக் காத்து வாழும் வழியாகும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 11, மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. செந்தமிழ்ச்செல்வன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

11—

கட்டட வசதி

***18282—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதி, அனந்தபுரம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

[2008 நவம்பர் 12

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விழுப்புரம் மாவட்டம், அனந்தபுரம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு அரசு புறம்போக்கு நிலம் ஏதும் அந்தக் கிராமத்தில் இல்லாததால், தனியார் நிலம் வாங்க இடத்தேர்வு நடைபெற்று வருகிறது. இடம் தேர்வு செய்யப்பட்டவுடன், அனந்தபுரம் விற்பனைக் கூடத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டம், எனது மேல்மலையனூர் தொகுதிக்குட்பட்ட அனந்தபுரத்தில் இருக்கிற ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் கடந்த 2 ஆண்டுகளுக்கு மேலாக இயங்காமலும், அதற்கென்று சொந்த இடமும், சொந்தக் கட்டடமும் இல்லாமலும் அந்தப் பகுதியில் இருக்கிற சுமார் 50,000-த்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் பெரிதும் பாதிப்பிற்குள்ளாகியிருக்கிறார்கள். அதை கடந்த காலத்திலே நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்றிருக்கிறேன். எனவே, அங்கு பேரூராட்சிக்குச் சொந்தமான இடங்களும் இருக்கின்றன. அப்படி இல்லை என்று சொன்னாலும், எங்கேயாவது ஒரு இடத்தைத் தேர்வு செய்து அதை விலைக்கு வாங்கியாவது அந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கென்று ஒரு தனிக் கட்டடத்தை அமைத்து, அந்தப் பகுதி விவசாயிகளுடைய நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பு சொன்னதைப்போல, மேல்மலையனூர் தொகுதியில் அவலூர்பேட்டை, அனந்தபுரம், வளத்தி ஆகிய இடங்களில் மூன்று ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் இயங்குகின்றன. வளத்தி, அவலூர்பேட்டை ஆகிய இரண்டும் சொந்த இடங்களில் இயங்குகின்றன. அனந்தபுரம் வாடகைக் கட்டடத்தில்தான்

2008 நவம்பர் 12]

இயங்குகிறது. வாடகைக் கட்டடத்தில் இயங்கும் இந்த விற்பனைக் கூடத்தின் பழுதடைந்த ஏலக் கொட்டகையினைக்கூட சீர் செய்வதற்கு 2 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. நிலம் தனியாரிடத்திலேதான் பெற வேண்டியிருக்கிறது அல்லது கையகப்படுத்த வேண்டும். அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நிலம் கையகப்படுத்தப்பட்டவுடன் அங்கு ஏலக் கொட்டகை கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய விளக்கத்தை ஏற்றுக்கொள்கிறேன். அதேபோன்று, என்னுடைய தொகுதியில் மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட வளத்தியில் இருக்கிற ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் போதிய கட்டடங்கள் இன்றி அங்கு கொண்டு வருகிற உணவுப் பொருட்கள் மழைக்காலங்களில் வீணடிக்கப்படுகிற ஒரு நிலை இருக்கின்றது. எனவே, அதற்கும் ஒரு நிரந்தரமான கட்டடம் வேண்டும். அதேபோன்று எனது தொகுதியினுடைய வட்டத் தலைநகராக இருக்கின்ற செஞ்சியில் இருக்கிற ஒழுங்குமுறை விற்பனைக் கூடமானது, மிகப் பெரிய அளவில் விழுப்புரம் மாவட்டத்திலேயே விவசாயிகளுடைய விளைபொருட்களை கொள்முதல் செய்கிற ஒரு ஒழுங்குமுறை விற்பனைக் கூடமாகும். அங்கே நாள் ஒன்றுக்கு ஏறக்குறைய 10,000 மூட்டைகளுக்கும் மேலாக நெல்மணிகள் கொண்டுவரப்பட்டு, விவசாயிகளும், வியாபாரிகளும் வந்து செல்கின்ற ஒரு நிலை இருக்கிறது. அங்கு போதிய அளவிற்கு பாதுகாப்பான உணவுக் கிடங்குகளும் இல்லை. எனவே, அந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கென உணவுக் கிடங்குகளைக் கூடுதலாக அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டம் விற்பனைக் குழுவின்கீழ் 17 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் செயல்பட்டு வருகின்றன. இதில் திண்டிவனம், திருக்கோவிலூர், உளுந்தூர்பேட்டை, விழுப்புரம்,

சின்னசேலம், கள்ளக்குறிச்சி, செஞ்சி, தியாகதுர்கம், சங்கராபுரம், அவலூர்பேட்டை, மரக்காணம், விக்கிரவாண்டி, வளத்தி ஆகிய 13 இடங்களில் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. அனந்தபுரம், திருவெண்ணெய்நல்லூர், மணலூர்பேட்டை, மூங்கில்துறைப்பட்டு ஆகிய 4 இடங்களில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, செஞ்சி ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் மிகப் பெரிய அளவில் வியாபாரிகளும், விவசாயிகளும் வந்து செல்லக்கூடிய ஒரு இடமாக இருக்கக்கூடிய காரணத்தினால், அதற்கு இடவசதி, கட்டட வசதிகள் தேவையென்றால் அரசு ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கும்.

முற்பகல் 9-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 12, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். பழனிசாமி, மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

12—

நீதிமன்றக் கட்டடம்

***31002—திரு. ஆர்.எம். பழனிசாமி:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோட்டில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஈரோட்டில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் கட்டுவதற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ரூ.375 இலட்சங்களுக்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டு, 10-9-2008 அன்று டெண்டர் வைக்கப்பட்டு, அந்த டெண்டர், அரசினுடைய Tender Award Committee-க்குச் சென்றிருக்கிறது. அவர்களுடைய ஒப்புதல் வந்த பிறகு பணி துவங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். பழனிசாமி.